**கவனிக்க.**- *2019.03.08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2115 - 2019 මාර්තු මස 15 වැනි සිකුරාදා - 2019.03.15

*2115 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 74 |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 75 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.**- (i) தெங்கு அபிவிருத்தி (திருத்தம்) சட்டமூலம் 2019, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) நீதித்துறை (திருத்தம்) சட்டமூலம் 2019, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது *2019, ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, மாச்சு மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

73-B81504-353(2019/03)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## பிசுக்கால் மூலம் காணிகள் ஏல விற்பனை
## பொலநறுவை மாவட்ட நீதிமன்றம்

இல. 75, சேர் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 2 என்ற முகவரியில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையும் மற்றும் அரலங்கவில என்ற இடத்தில் கிளை அலுவலகம் ஒன்றையும் கொண்டுள்ள மக்கள் வங்கி

வழக்கு இல.: 16419/ எம்பி/ 2015
தன்மை: ஈடு
தடுப்பாணை
இல. : 74/18

வழக்காளி

ஏகநாயக முதியன்செலாகே சானக ஜீவந்த பண்டார,
ஏகநாயக முதியன்செலாகே செனவி ரத்ன பண்டார, இல.12, பகலஎல்லே வெவ , எல்லேவெவ.

எதிராளிகள்

2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதியாகிய இன்று,

பொலநறுவை மாவட்ட நீதிமன்றத்தில் மேலே குறிப்பிடப்பட்ட இலக்க வழக்கில் பொலநனறுவை மாவட்ட நீதிமன்றத்தின் பிசுக்கால் அலுவலருக்கு வழங்கப்பட்ட ஆதனத்தை தடை ஏற்படுத்தி விற்பனை செய்தல் எழுத்தாணையின் அடிப்படையில் மேலே சொல்லப்பட்ட எதிராளிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 8, 96, 516. 79 கொண்ட தொகையையும் மற்றும் அத்தகைய ஆதனங்களை ஏல விற்பனை செய்கின்ற கட்டணங்களையும் மீட்டுக் கொள்வதற்காக சொல்லப்பட்ட பிசுக்கால் அலுவலர் மூலம் தடையேற்படுத்தப்பட்டுள்ள கீழே அட்டவணைகளில் நன்கு விபரிக்கப்பட்ட திம்புலாகல பிரதேச செயலாளர் பிரிவில் எகொடபற்று, திம்புலாகல பிரதேச சபை எல்லைகளுக்குள் 215 பகலஎல்லேவெவ கிராம அலுவலர் பிரிவில் பகலஎல்லே வெவ என்ற கிராமத்தில் நிலஅளவையாளர் தலைமை அதிபதியினால் தயாரிக்கப்பட்டு அவரது பொறுப்பில் உள்ள இறுதி குடியேற்ற வரைபடம் பொலநறுவை (இ.கு.வ.பொ) 250 (மேலதிகம் 01) இல் துண்டம் 41 என்ற அரசகாணியின் விஸ்தீரணம் பூச்சியம் தசம் இரண்டு ஒன்று பூச்சியம் ஹெக்டேயர் ( ஹெ: 0.210) கொண்ட காணி 2019, மாச்சு மாதம் 28 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு சொல்லப்பட்ட ஆதனங்கள் அமைந்துள்ள இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

**ஆதனத்திற்குச் செல்கின்ற பாதை.**- பெலேடியாவ சந்தியிலிருந்து பகலஎல்லேவெவ பிரதேசத்தை நோக்கியுள்ள பாதையில் சுமார் 3.7 கிலோ மீற்றர் வரை முன்னால் சென்று இடதுபக்கம் திரும்பி சுமார் 100 மீற்றர் வரை முன்னால் முகவரியில் குறிப்பிடப்பட்ட வீடு அமைந்துள்ளது.

### முதலாம் அட்டவணை

வடமத்திய மாகாணம், பொலநறுவை மாவட்டத்தில் திம்புலாகல பிரதேச செயலாளர் பிரிவில் எகொட பற்று, திம்புலாகல பிரதேச சபை எல்லைகளுக்குள் 215 பகலஎல்லேவெவ கிராம அலுவலர் பிரிவில் பகல எல்லேவெவ என்ற கிராமத்தில் நிலஅளவையாளர் தலைமை அதிபதியினால் தயாரிக்கப்பட்டு அவரது பொறுப்பில் உள்ள இ.கு.வ.பொ. 250 (மேலதிகம் 01 ) இல் துண்டம் 41 என்ற அரச காணியின் எல்லைகள் பின்வருமாறு:-

வடக்கு: துண்டம் 34;
கிழக்கு: துண்டம் 40;
தெற்கு: துண்டம் 48;
மேற்கு: துண்டம் 42.

ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணி பூச்சியம் தசம் இரண்டு ஒன்று பூச்சியம் ஹெக்டேயார்( ஹெ.0.210) விஸ்தீரணத்தைக் கொண்டு அதனகத்தேயுள்ள வீடு, கட்டிடங்கள், மரங்கள் போன்ற அனைத்தையும் உள்ளடக்கியது. இந்த ஆதனம் பொலநறுவை காணிப்பதிவகத்தில் LDO / 6 / 1/6/7 இருமடியிலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

### இரண்டாம் அட்டவணை

வடமத்திய மாகாணம், பொலநறுவை மாவட்டத்தில் திம்புலாகல பிரதேச செயலாளர் பிரிவில் எகொட பற்று, திம்புலாகல பிரதேச சபை எல்லைகளுக்குள் 215 பகலஎல்லேவெவ கிராம அலுவலர் பிரிவில் பகல எல்லேவெவ என்ற கிராமத்தில் அமைந்துள்ள காணிக்கு உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஏ. பிரேமரத்ன அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட W 201/13 ஆம் இலக்கத்தையும் 2013.06.29 ஆந் திகதியுடையதுமான வடைபடத்தில் சகலதும் பிரித்தொதுக்கப்பட்டு துண்டம் 01 என விபரிக்கப்பட்ட காணி பூச்சியம் தசம் இரண்டு ஒன்று பூச்சியம் ஹெக்டேயார் (ஹெ.0.210) விஸ்தீரணத்தைக் கொண்டு பின்வருமாறு எல்லைகளைக் கொண்டுள்ளது.

வடக்கு: இ.கு.வ.பொ. 250 வரைபடத்தில் துண்டம் 34;
கிழக்கு: இ.கு.வ.பொ. 250 வரைபடத்தில் துண்டம் 40;
தெற்கு: இ.கு.வ.பொ. 250 வரைபடத்தில் துண்டம் 48;
மேற்கு: இ.கு.வ.பொ. 250 வரைபடத்தில் துண்டம் 42.

சொல்லப்பட்ட எல்லைகளுக்குள் அமைந்துள்ள பூச்சியம் தசம் இரண்டு ஒன்று பூச்சியம் ஹெக்டயார் ( ஹெ. 0.210) விஸ்தீரணத்தைக் கொண்டு அதனகத்தேயுள்ள வீடு, கட்டிடங்கள், மரங்கள் போன்ற அனைத்தையும் உள்ளடக்கியது. இந்த ஆதனம் பொலநறுவைக் காணிப்பதிவகத்தில் LDO/J/4/2

இருமடியிலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உரித்து தொடர்பாக விசாரணை செய்வதற்காக; முகாமையாளர், மக்கள் வங்கி- அரங்கவில.தொலைபேசி இலக்கம்: 027-2257191.

வழக்காளியின் சட்டத்தரணி:
திருமதி நிர்மலா சீயடிகம்மன.
தொ.இல.: 027- 2225162.

பிரதி பிசுக்கால் /நிறைவேற்றல் அலுவலர்,
பதிவாளர்.

மாவட்ட /நீதிவான் நீதிமன்றம்,
பொலநறுவை.

3- 818

---

# நானாவித அறிவித்தல்கள்

## ஒடுக்குதல் தொடர்பான அறிவித்தல்

தனது குடியியல் நீதிமன்ற நியாயாதிக்கத்தை அமுல்படுத்தும் போது கொழும்பில் நடைபெறுகின்ற மேல் மாகாண நீதிமன்றத்தில் ஒடுக்குதல் பற்றிய அறிவித்தல்

பன்னிப்பிட்டிய, அரவ்வல, ரத்ன மாவத்தை, இல. 545/3 இல் தனது பதிவு அலுவலகத்தைக் கொண்டிருக்கும் கலர்ஸோன் ( பிரைவேட்) லிமிட்டட் சம்பந்தமான காரணத்தினால்,

வழக்கிலக்கம்.:
HC/ Civil/99/2018/ CO

மற்றும்

தன்மை: ஒடுக்குதல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 270(அ) மற்றும் / அல்லது (உ) மற்றும் /அல்லது (ஊ) பிரிவின் கீழ் உள்ள நீதிமன்ற நியாயாதிக்கத்தின் படி கம்பனியை ஒடுக்குதல் தொடர்பான மனு.

COLORZONE ( PRIVATE) LIMITED
No. 545/3, Rathna Mawatha,
Arawwala, Pannipitiya.

மனுதாரர்

குடியியல் நீதிமன்ற நியாயாதிக்கத்தை அமுல்படுத்தல் தொடர்பாக கொழும்பில் நடைபெறுகின்ற மேல் மாகாண நீதிமன்றத்தினால் மேற்குறித்த கம்பனியை ஒடுக்குவதற்காக கலர்ஸோன் (பிரைவேட்) லிமிட்டட் COLORZONE ( PRIVATE) LIMITED இனால் 2018, திசெம்பர் மாதம் 11 ஆந் திகதி அந் நீதி மன்றத்தில் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டதெனவும் அம்மனு 2019ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி நீதிமன்றத்தின் முன் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளது எனவும் அம்மனு தொடர்பில் கட்டளையொன்றை செய்வதற்காக உதவுவதற்கு அல்லது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு விரும்பும் அக்கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுத் தொகை செலுத்துநர் அந்நோக்கத்திற்காக விசாரணையின்போது தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோற்ற முடியும் எனவும் மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்துகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆர். எம். சாமலி எஸ். ரணதுங்க,
சட்டத்தரணி,
இல. 772/20,
விஜேசிங்க மாவத்தை,
மாதின்னாகொட, ராஜகிரிய.

**குறிப்பு**: அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின்போது தோற்றுவதற்கு எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அவ்வாறு செய்வற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட திருமதி.ஆர். எம். சாமலி ரணதுங்க, சட்டத்தரணிக்கு எழுத்து மூலம் அறிவித்து கையளிக்க வேண்டும். அல்லது அஞ்சலில் அனுப்ப வேண்டும். அறிவிக்கும் ஆளின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன் ஆள் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது (சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின்) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன் 2019, ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புவதாயின் அவர்களுக்கு (மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு) மேற்குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு போதுமான காலநேரத்துடன் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

3-1086

## வாணிப நியாயாதிக்கத்தைச் செயல்படுத்தும் (கொழும்பில் நடாத்தப்படும் ) மேல் மாகாண உயர் நீதிமன்றத்தில்

வரையறுக்கப்பட்ட கமல் பிவிசி இண்ட்டரில் பிரைவேட் லிமிட்டெட்,இல. 56, கதவெல மாவத்தை, ரத்மலான, விடயத்தில்

வழக்கு இலக்கம்: எச் சீ/சிவில்/03/19/சீஓ
வகை: முடிவுறுத்தல்
நடைமுறை: சாராம்சம்
பெறுமதி:
ரூ.307, 040, 847.19

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பகுதியின் கீழ் நீதிமன்றத்தினால் முடிவுறுத்தப்படுவதற்கான விண்ணப்பமொன்றின் விடயத்தில்

ராஜகிரிய, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 100/ 1 இல் தனது பதியப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதும்,

ராஜகிரிய நாவல வீதி, இல. 504 இல் தனது பிரதான வியாபார ஸ்தானத்தைக் கொண்டுள்ளதுமான வரையறுக்கப்பட்ட எல்ஔல்சீ பெக்டர்ஸ் ஸ்தாபனம்

விண்ணப்பதாரர்

கொழும்பு வாணிப உயர் நீதிமன்றத்தினால் மேற்படி கம்பனியை முடிவுறுத்துவதற்காக ராஜகிரிய, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 100/1 இல் தனது பதியப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதும் ராஜகிரிய, நாவல வீதி, இல. 504 இல் தனது பிரதான வியாபார ஸ்தானத்தைக் கொண்டுள்ளதுமான வரையறுக்கப்பட்ட எல்ஔல்சீ பெக்டர்ஸ் ஸ்தாபனத்தினால் 2019, சனவரி 14 ஆந் திகதி விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி விண்ணப்பம் 2019, வைகாசி 17 ஆந் திகதி நீதிமன்றத்தினால் விசாரணை செய்யப்படுவதற்கு பணிக்கப்பட்டுள்ளது. மேற்படி விண்ணப்பத்தின் மீது தீர்ப்பு வழங்கப்படுவதை ஆதரிக்கும் அல்லது எதிர்க்கும் மேற்படி கம்பனியின் ஏதும் கடன் வழங்கிகள் அல்லது பங்களிப்பாளர் அந் நோக்கத்திற்காக விசாரணை செய்யப்படும் நேரத்தில் நேரடியாகவோ அல்லது அவரின் ஆலோசனை சட்டவாதியின் மூலமாகவோ ஆஜராகலாம். அதற்குரிய கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் முறைப்பாட்டின் பிரதியை பெற்றுக்கொள்ள நாடும் மேற்படி கம்பனியின் ஏதும் கடன்வழங்கிகள் அல்லது பங்களிப்பாளருக்கு கீழ் கையொப்பமிடுபவரினால் பிரதியொன்று வழங்கப்படும்.

ஸ்ரீமாள் பொன்னம்பெரும,
இல. 22, ஷெடி குரூவ் எவெனியூ,
கொழும்பு 8.

**குறிப்பு**: மேற்படி விண்ணப்பத்தின் மீதான விசாரணையின்போது ஆஜராகயிருக்க நாடும் எந்த நபரும் அவ்வாறு செய்வதற்கான தனது விருப்பத்தின் எழுத்து மூலமான அறிவித்தலை மேல் பெயர் குறிப்பிடப்பட்ட ஸ்ரீமாள் பொன்னம்பெருமவுக்கு சமர்ப்பிக்கவோ அல்லது கடித மூலமோ அனுப்பி வைக்க வேண்டும். அறிவித்தலில் அந்நபரின் பெயரும் முகவரியும் ஸ்தாபனமொன்றாயின் அதன் பெயரும் முகவரியும் குறிப்பிடப்பட வேண்டியதோடு அந்நபரினால் அல்லது ஸ்தாபனத்தினால் அல்லது அவரின் அல்லது ஸ்தாபனத்தின் ( இருப்பின்) சட்டவாதியினால் கையொப்பமிடப்பட்டு மேல் பெயர் குறிப்பிடப்பட்டவருக்கு 2019, வைகாசி 16 ஆந் திகதி பி.ப. 6.00 மணிக்கு பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக சமர்ப்பிக்கவோ அல்லது கடித மூலமாகவோ அனுப்பி வைக்க வேண்டும்.

ஸ்ரீமாள் பொன்னம்பெரும,
இல. 22, ஷெடி குரூவ் எவெனியூ,
கொழும்பு 8.

3-800

---

## அல் பலாஹ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முஜிபுர் ரஹ்மான் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 53 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் , ''அல் பலாஹ் மன்றம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.:-

பின்வரும் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:-

1. முன்பாடசாலை சிறார்களுக்கு கல்வி வழங்கலும், புலமைப் பரிசில்கள் வழங்கலும்;
2. நாட்டின் சமூக , கலாச்சார மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் பங்கேற்றல்;
3. மக்களின் ஒழுக்க மற்றும் கலாச்சார விழுமியங்களைப் பாதுகாப்பதற்கும் பேணுவதற்கும் வழிவகைகளை மேற்கொள்ளல்,

பிறவும்.

முஜிபுர் ரஹ்மான் ,
பாராளுமன்ற உறுப்பினர்.

3-791

---

## ரதனதிஸ்ஸ சமாதான மன்றம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

சிசிர ஜயக்கொடி ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 53 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்கீழ் ,''ரதனதிஸ்ஸ சமாதான மன்றம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் '' எனப்படும் சட்டமூலமொன்றைப்

பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.:-

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:-

1. மத முக்கியத்துவமான இடங்களுக்கு உதவுதல்;
2. பிரிவெனாக்களுக்கு உதவியளித்தல்;
3. தலைமைத்துவ பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதலும்,

பிறவும்.

சிசிர ஜயகொடி,
பாராளுமன்ற உறுப்பினர்.

3-792

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.